Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.190/2022 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW 3 |
| Name | : | மகேஷ் |
| Father's/Husband's Name | .. | மகாலிங்கம் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 41 |

Date: 05.12.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கறிஞர் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் மணலி சின்னசேர்க்காடு பகுதியில் வசித்து வருகிறேன். கம்பி வேலை பார்த்து வருகிறேன். பரமேஸ்வரி மற்றும் சுரேஷ் ஆகிய நபர்களை எனக்கு தெரியாது. அப்துல் ரஹீம் என்ற நபரையும் எனக்கு தெரியாது. வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவும் இல்லை கேள்விப்படவும் இல்லை.

கற்றறிந்த அரசு தரப்பு உதவி குற்றவியல் வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கும்படி கோரிக்கை விடுத்தார். பரிசீலிக்கப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. வழக்கின் புகார்தாரர் சுரேஷ் மற்றும் பரமேஸ்வரி ஆகியோர் என்னுடைய நண்பர் மற்றும் நண்பரின் மனைவி என்றும் அவர்கள் இருவரும் எதிரி அப்துல் ரஹீம் என்பவரிடம் பழைய தையல் மெஷின் வாங்கியதாகவும் அது சரியாக வேலை செய்யாததால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது என்றும் அதில் ரூபாய் 9000/- தவிர மீதம் ரூபாய் 3000/- அப்துல் ரஹீம் கொடுக்க வேண்டும் என்றும் அதனை கேட்க சென்ற பொழுது எதிரி அப்துல் ரஹீம் 25.03.2022 அன்று மேற்படி நபர்களை ஆபாசமாக பேசி கைகளால் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல.